Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரு. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } ஈரோடு, 12-5-1945 சித்திரை-மீ 30உ { மலர் 31

கிருஷ்ணன்—அர்ஜுனன் சம்வாதம்

(சித்திரபுத்திரன்)

அர்ஜுனன்:- சகேசினாம் விகேசினாம் காகதிபுருஷோத்தமா?

கிருஷ்ணன்:- அஹம் சந்யாசி ரூபேணாம் புரோஷ்டிதாம் தனஞ்செயா! இதன் பொருள்.

அர்ஜுனன்:- ஹே புருஷோத்தமா! தலையில் மயிருடனும், மயிரில்லாமல் மொட்டைத் தலையுடனும் இருக்கும் (படியாய் நீ செய்திருக்கின்ற) விதவைகளுக்கு என்ன கதி?

கிருஷ்ணன்:- ஹே அர்ஜுனா! நானே சந்நியாசியாக பூமியில் அவதரித்து அவர்களின் ஆசையைப் பூர்த்திசெய்வேன்.

அர்ஜுனன்:- ஹே கிருஷ்ணா! உன்னை ஒருபெரிய கடவுளென்று சொல்லிவிட்டு பிறகு நீ இப்படிச் செய்தாய், அப்படிச்செய்தாய், கண்ட ஸ்திரீகளுடன் கலந்தாய், உதை பட்டாய், அடிபட்டாய், அழுவாரற்ற பிணமாய் செத்தாய் என்றெல்லாம் எழுதி வைத்திருக்கின்றார்களே இதைப்பற்றிஉனக்குச் சிறிதும் அவமானமில்லையா?

கிருஷ்ணன்:-ஹே அர்ஜுனா! அதைப் பற்றி நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். இதெல்லாம் எனது திருவிளையாடலென்றும் இவற்றைப்படித்த கேட்ட ஒவ்வொருவரும் இதனைக் கொண்டாட வேண்டுமே ஒழிய குற்றம் சொல்லக் கூடாதென்றும், குற்றம் சொன்னால் பாவமென்றும், நரகமென்றும் அவற்றை எழுதின அவர்களே எழுதி இழிவை அடக்கிவிட்டார்கள். ஆதலால் நமக்கு ஏன் கவலை?

அர்ஜுனன் - கிருஷ்ணா அதுதான் போகட்டும் நம்பமுடியாத அநேக பொய்யையும், புளுகையும் சொல்லி நீ சின்னக் குழந்தையாயிருக்கும்போது பெரிய முலையை உறிஞ்சி சூப்பையாக்கிவிட்டாயென்றும், மலையை சுண்டுவிரலால் குடையாய்ப் பிடித்தாய் என்றும், 10 ஆயிரம் பெண்களை ஏககாலத்தில் கலந்தாய் என்றும் இப்படியெல்லாம் எழுதி இருக்கின்றார்களே இந்தப் புளுகுகளை எவன் நம்புவான்?

கிருஷ்ணன்:-ஓ! அர்ஜுனா அதைப் பற்றியும் நீ கவலைப்படாதே. ஏனென்றால் அந்தப்படியெல்லாம் எழுதினவர்கள் இவற்றையெல்லாம் எவன் நம்பவில்லையோ அவன் நாஸ்திகன் என்றும் அவனை அரசன் தண்டிக்கவேண்டுமென்றும் அரசன் தண்டிக்காவிட்டாலும் அவன் நரகத்துக்குப் போகவேண்டும் என்றும் எழுதி மக்களை மிரட்டிப் பயப்படுத்திவைத்திருக்கின்றார்கள். ஆதலால் எவனும் தைரியமாய் தான் இவற்றை நம்புவதில்லை என்று வெளியில் சொல்ல வரமாட்டான்?

அர்ஜுனன்:- அதென்ன கிருஷ்ணா! பாவம் என்றாலென்ன? நரகம் என்றால் என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே.

கிருஷ்ணன்:- அந்தப்படி புரியாமலிருக்கின்றதாகவே பார்த்துத்தான் சொல்லி இருக்கின்றார்கள்.

அர்ஜுனன்:- அதென்ன புரியாததைச் சொன்னால் என்ன பயன்.

கிருஷ்ணன்:- ஒருவனுக்குத் தெரியாததையும், புரியாததையும் சொன்னால் தான் மனிதர்கள் பயப்படுவார்கள். புரியும்படியானதாக எதைச் சொன்னாலும் திருப்பிக் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆதலால்தான் அது செய்தால் பாவம், இது செய்தால் பாவம், நினைத்தால் பாவம் என்றெல்லாம் மிரட்டிவைத்திருக்கின்றார்கள்.

அர்ஜுனன்:- இந்த மாதிரி எத்தனை நாளைக்கு ஏமாற்ற முடியும்?

கிருஷ்ணன்:- முடிந்தவரையில் முடியட்டுமே.

அர்ஜுனன்:- இந்தப்புரட்டு வெளியாய்விட்டால் அப்புறம் என்னசெய்வது?

கிருஷ்ணன்:- அப்புறம் வேறு புரட்டை யுண்டாக்கிக்கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

அர்ஜுனன்:- அதென்ன புரட்டு?

கிருஷ்ணன்:- அரசியல் புரட்டு.

அர்ஜுனன்:- அதுவும் வெளியாகிவிட்டால்.

கிருஷ்ணன்:- அதற்குள் பார்த்துக்கொள்ளுவோம். இந்த இரண்டு புரட்டும் மண்டுகள் நிறைந்த இந்தியாவுக்கு சுலபத்தில் வெளியாய்விடவா போகின்றது?

அர்ஜுனன்:- சுயமரியாதைக்காரர்கள் இந்த இரண்டையுமே சேர்த்து வெட்ட வெளியாக்கிக்கொண்டு வருகின்றார்களே சீக்கிரத்தில் வெளியாய்விடாதா?

கிருஷ்ணன்:-அவர்களால் சுலபத்தில் முடியாது. ஏனென்றால் அந்த இரண்டு புரட்டின் மேல் தாங்கள் வாழ்வையே ஏற்பாடு செய்துகொண்ட அநேகர் சுயமரியாதைக்காரர்களுக்குள்ளாகவே இருக்கிறார்கள். அந்தப்படி மீறி அவர்கள் எல்லாம் தங்கள் வாழ்க்கைக்குக் கேடு வந்தாலும் வரட்டுமென்று துணிந்து கட்டுப்பாடாய் வேலை செய்தாலுங்கூட அது தமிழ்நாட்டிலும்; மலையாளத்திலும் தான் செல்லும் இந்தியாவில் மற்ற பாகங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

அர்ஜுனன்:-எப்படியானாலும் என்னைக்கிருந்தாலும் இந்த இரண்டு புரட்டுக்கும் ஆபத்து ஆபத்துத்தான்.

கிருஷ்ணன்:-அந்தக்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம். நடந்தவரை நடக்கட்டும்.

கரூர் காமாட்சியம்மன் கோவில் தெருவில் திராவிட நெசவுத் தொழிலாளர் பொதுக் கூட்டம் 27-4-45-ல் தோழர் எஸ். குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் வி. கே. புலிகேசி, எம். கே. அமிர்தலிங்கம், எம். நக்கீரர், எம். கே. கரிகாலன், சி. கோவிந்தராசு, பி. கே. அய்யா முதலியவர்கள் தொழிலாளர் கடமை என்பது பற்றிப் பேசினார்கள். சேலத்தில் நடைபெறவிருக்கும் தென்னாடு நெசவுத் தொழிலாளர் மாநாட்டை ஆதரித்தும், எல்லா ஊர்களிலும் திராவிடத் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மற்றும் பல தீர்மானங்களும் தீர்மானிக்கப்பட்டன.

தமிழாசிரியர்கள்

(புலவர் நா. மு. மாணிக்கம்)

இங்கு யான் எடுத்துக்கொண்ட தலைப்பு, தமிழாசிரியர்கள் என்பதாகும். இந்தத் தலைப்பு நான் கொடுத்த தலைப்பு அல்ல என்பதை முதலிலேயே கூறிவிடுகிறேன்.

காலச் சுழலிலே சிக்கி கருத்தைப் பறிகொடுத்த காரிகையர், ஆரியப் பழக்க வழக்கத்தால் அறிவை அடகுவைத்த அணங்குகள், மதத்தின் பெயராலே மடத்தனத்திற்குப் பலியாகும் மங்கையர்கள், வேறு வழியின்றி விதியைத் துணைக்கழைக்கும் வேல்விழி மாதர்கள், நாளுக்கொரு ஆண்கள் மீது அவர் தம் பொருள் நலங்கருதி நாட்டங்கொள்ளும் நளினியர்கள், தோல்கள் சுருங்கித் தொங்கிக்கிழமான காலத்தில், கடைக்கண் பார்வையும், கைச்சாடையும், காளையர்களைக் கட்டிலறை ஏறவைக்க வலுவிழந்துபோன காலத்தில், மோகனப் புன்னகையும், பாகெனச் சுவைத்திடும் மொழியும், முறுக்கேறப்பெற்ற காம்பினை உடைய மோகனச் சுந்தரர்களை அண்டி வராமல் அலட்சியப்படுத்திடச் செய்து, வேறு ஆடலழகிகளை நாடிச் செல்லவைக்கும் காலத்தில், தகிடுதத்தம் பல செய்து, தளர்ந்து சிதைந்த தங்கள் வாழ்வின் தளர்ச்சியை ஒழித்திடத் தாய்க்கிழவிகள் ஆவார்களாம். கொஞ்சுமொழி பேசி கோமான்களையும் கெஞ்சவைத்த அக்கோமளவல்லிகள், பற்பல இரவிலும் பற்பல குணமுடைய பற்பல ஆண்களைப் படுக்கையறைகளில், பரிதவிக்கச் செய்திட்ட அப்பாவையர்கள், நஞ்சு கலந்த அக்கொஞ்சு மொழிகளை, நலத்தையும் பெறுவோமா? நாம் பிறந்த இவ்வாழ்விலே, ஏன் இந்த வறுமைக் குடும்பத்தில் பிறந்தோம், இனி நமக்கு எத்தகைய கணவன் வரப்போகின்றானோ? குடிகாரனாயிருப்பானோ? கொலைகாரனாயிருப்பானோ? தடியனாயிருப்பானோ? சாகப்போகும் கிழவனாயிருப்பானோ? என்று எண்ணி எண்ணி ஏங்கும், வறுமையும் அழகுமிக்க வனிதையர்களிடத்துப் பயன்படுத்துவார்களாம். வேளா வேளைக்கு விதவிதமான உணவு, சமையலறைப் பக்கம் நீ தலைகாட்டாமலே, நின் தலையசைப்பை எதிர்பார்த்துத் தாதிமார்கள் ஓடிவருவர். அருந்தும் நிலையறிந்து பொருந்தியவகையிலே ஆக்கிய அறுசுவையுணவை வைத்திருப்பர். நேரத்திற்கு [illegible] நிறத்திலே, நேர்த்தியான ஆடைகள். உடலை வருத்தாமல் உள்ளத்திற்கு களிப்பைத்தரும் உயர்ந்த வகையான ஆடைகள். இறுக்காமல், உடம்பில் இருக்கின்றது என்ற உணர்ச்சியில்லாமல், இருக்கும் அழகினைப் பெருக்கிக்காட்டவல்ல தன்மை மலிந்த மென்மையான ஆடைகள். ஆடை ஒரு நிறம், மேலாடை மற்றோர் நிறம். காளைகள் மனத்தினைக் காந்தம்போலக் கவரவல்ல கவர்ச்சிகரமான உடைகள் உண்டு, மேலும் உண்டு. மூளியாயிருக்கும் உன் காதிற்கும், மொட்டையாய் இருக்கும் உன் அழகிய கூந்தலுக்கும், முண்டைச்சிபோலிருக்கும் உன் கழுத்திற்கும், மலரும் இலையும் இல்லா கொப்புகள் போலிருக்கும் உன் மெல் விரலுக்கும் ஏற்ற அணிகலன்கள் ஏராளமாக உண்டு. நீ விரும்பினால் பவளத்திலும், முத்திலும் வைரத்திலும், வைடூரியத்திலும் பற்பலவகையான ஆபரணங்கள் வந்து குவியாதோ? நீ மனம் வைத்தால், இந்த ஊரிலே எந்தச்சீமானைப் பணியவைக்கமாட்டாய்? நீ எண்ணங்கொண்டால் எப்பேர்ப்பட்ட இன்பத்தை அடையமாட்டாய்? உனக்கு இருக்கும் அழகு என்ன சாமானியமா? உன்னழகு உனக்குத் தெரியவில்லை, தக்கபடி எடுத்துச் சாற்றுவாருமில்லை, ஏன் இந்த இழி நிலை உனக்கு. உன்னையொத்த அழகு இந்நகரிலே வேறு எக்கன்னியருக்குண்டு. இருந்துங்கூட அவர்களுக்கு ஏன் அந்த நிலை. உனக்கு ஏன் இந்த நிலை; எண்ணிப்பார், இதென்ன தலைவிதியா? பிரமாவால் எழுதிவைக்கும் தலைவிதி என்று சொல்லப்படுவதில் பெரும் பங்கு, எழில்மிக்க மங்கையருக்குண்டு என்பதையறியாயோ, விதியை எழுதவேண்டிய அரசியாய் இருப்பதைவிடுத்து, அஞ்சி நடுங்கி அடிமையாய் இருக்க நீ ஆசைப்படுதல்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

பாரதி தாசன்

(எஸ். கருணானந்தம்)

★

1. மெய்ம்மையைப் போற்றி வாழும் மேன்மையாம் தமிழர் நாட்டில்
கைம்முதல் கல்வி யின்றிக் கவிகளை எழுதப் போந்தோர்
பொய்ம்மையின் எல்லை யாகும் புராணமே செய்தார்; இன்றோ,
செம்முறை நன்க றிந்து, சீர்திருத் தங்கள் செய்து,

2. பாட்டிலே புதுமை கண்டான் பாரதி தாசன் என்பான்;
நாட்டிலே மக்கள் துன்பம், நலிவுகள், வறுமை, சூழ்ச்சி,
ஏட்டிலே விரித்து ரைக்கும் ஏழையின் தோழன் சீர்த்தி
காட்டிட என்னால் ஆமோ? கண்ணுளோர் காண வேண்டும்.

3. உவமையில் புதுமை என்ன, உளந்தொடும் உணர்ச்சி என்ன,
நவநவக் கருத்தைக் கூறும் நடையிலே எளிமை என்ன,
கவலையைத் தீர்க்கும் இன்பக் கவிநயம், நகைப்பும் என்ன,
அவனையிந் நாட்டார் நன்றாய் அறிந்திட வில்லை இன்னும்!

4. கல்வியின் உயர்வு சொல்வான், காதலின் பெருமை சொல்வான்,
நல்வினைக் குடும்ப மாற்றும் நடைமுறை நயந்து சொல்வான்,
பல்சுவை, விதவைத் துன்பம், பழந்தமிழ் இனிமை சொல்வான்,
அவ்வழி யால்நு ழைந்த ஆரியத் தீங்கும் சொல்வான்.

5. செந்தமிழ் நடையை நல்ல தீர்ப்புமே தெளிவாய்த் தோற்றும்,
சுந்தர இயற்கை மாண்பை அழகின்சிரிப்புச் சொல்லும்;
விந்தையாய் இல்ல றத்தைக் குடும்பவி ளக்கு வீசும்,
அந்தமாய் இருண்ட வீடு அறிவிலார் வாழ்வைப் பேசும்;

6. இன்னிசைத் தமிழர் பாட்டை இசை அமு(து) எடுத்துக் காட்டும்;
மன்னிய காதல் துன்பம் மாண்எதிர் பாரா முத்தம்,
இன்னமும் இயம்பும் காதல் நினைவுகள் என்ற நூலும்;
பன்னிற மலரின் தோட்டம் பாரதி தாசன் பாட்டே!

7. பாரதி தாசன் பாட்டைப் பயின்றிடும் பொழுதென் னெஞ்சில்
வீரமும், புரட்சி காணும் வேகமும், தமிழில் அன்பும்,
தீரமும், புத்து ணர்வும், சீர்திருத் தத்தில் நோக்கும்
பூரண மாகத் தோன்றும் புதுமையை என்ன சொல்வேன்?

8. உறங்கிய தமிழர் நாட்டார் உணர்ந்தனர் இற்றை நாளில்;
மறந்ததை மீண்டும் எண்ணி, மாபெரும் நிதிதி ரட்டி,
நிறைந்தபின் கவிஞர்க் கீந்து, சிறப்பிட முன்வந் துள்ளார்;
அறஞ்செயும் இயல்புள் ளோரே, அதற்கெனப் பொருளை ஈவீர்!

புதியமுறை கல்வி வேண்டும்

தோழர் ஜி. டி. நாயுடு அவர்களின் வற்புறுத்தல்

சென்றவாரத்திய தொடர்ச்சி

உதாரணத்திற்கு என்னையும் எனது நண்பர் டாக்டர் சி. எஸ். ராமசாமி அய்யரையும் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் இருவரும் 1940-ல் அமெரிக்காவில் இருந்தோம். ஒரு வருஷ காலத்தில் டாக்டர் ராமசாமி அய்யர் பல ஆஸ்பத்திரிகளையும் மருந்துச் சாலைகளையும் பார்வையிட்டு அமெரிக்காவில் செய்யும் முறைகளைக் கற்றுக் கொண்டார். நானும் அவ்வாறே அமெரிக்காவில் பல தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்த்து பல கற்றுக் கொண்டேன். கடைசியில் இருவரும், கோயமுத்தூருக்குத் திரும்பியதும் நாம் கற்றுக்கொண்டதை செய்து பார்த்துவிட வேண்டும் என்பதற்காகத் திட்டம் போட்டோம். அதன்படி கோயமுத்தூர் திரும்பியதும் திட்டப்படி வேலை துவக்கினோம். ஆனால் இதுவரை செய்ததென்ன? நமது டாக்டர் நண்பர் வழக்கம்போல் சளிக்கு, தலைவலிக்கு, மூன்று நாள் சுரத்துக்கு மருந்து எழுதிக்கொடுத்து வருகிறார்; நான் ஒரு மேஸ்திரி செய்யும் வேலையைச் செய்து வருகிறேன். இதற்குக் காரணம் என்ன? இன்றைய முறைக்கு நாம் அடிமையாய்விட்டோம் பழைய குருப்பிடித்ததையே பிடித்து அழுகிறோம் என்பதைத் தவிர வேறு என்ன?

நம் நாட்டுக் கல்வியைத் திருத்தியமைப்பது பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்ததுண்டு, டாக்டர் குமரப்பா, காந்தி, சார்ஜண்ட் முதலியவர்கள் எண்ணுவது போல் அல்ல நான் நினைப்பது; அமெரிக்கா முறையில் வாழ்க்கையோடு ஒட்டிய துரிதமான கல்வியைப் புகுத்த வேண்டுமென்று எண்ணினேன். இரண்டு மூன்று வருடத்திற்குள் கோயமுத்தூர் கல்லூரியை முதல்தரக் கல்லூரியாக மாற்றப்போவதாக ஒரு பிரஸ்தாபமிருந்தது. அப்பொழுது அதை அதிசயமென்று எண்ணியிருந்தேன். ஏனெனில் ஒரு சில மாணவர்களையோ, மாணவிகளையோ வீணில் கெட்டுப்போகாமல் தடுத்துவிடலாம் என்பதினாலேயாகும்.

கோவையில் செசவு சம்பந்தமான கல்வியைக் கற்பிக்கும் ஸ்தாபனத்தை நிறுவ நான் யோசனை கூறினேன். நமது பிரதம அதிதி மிகுந்த கவலையெடுத்துக் கொண்டார். இரண்டொருவரைத் தவிர எல்லா மில் முதலாளிகளிடமிருந்தும் நிதி திரட்டினோம். பிறகு நமது பிரதம அதிதியும் நிபுணர்களும் இங்கு வந்து இடம்பார்க்க வந்தார்கள். நானும் எனது தொழிற்சாலையில் ஒரு பாதியையும் தருவதாக ஒத்துக்கொண்டேன். பின்னர் அத்திட்டம் முழுவதும் கைவிடப்பட்டது. சர்க்காரின் அக்கரையை விளக்க இது ஒரு உதாரணம். என்னினும் மேன்மைதங்கிய கவர்னரின் முயற்சியாலும் தோழர் கனீலியின் முயற்சியாலும் மோட்டார் ரேடியோ இஞ்சினீயரிங் ஸ்தாபனம் நிறுவ அனுமதிகிடைத்தது.

இன்னும் ஏட்டுக்கலைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறதேயல்லாது தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதில்லை. சிவில் இஞ்சினீரிங், எலக்ட்ரிகல், மெக்கானிகல் முதலிய கலைகள் கற்பிக்கும் இஞ்சினீரிங் கல்லூரியை சர்க்கார் ஏன் இங்கு ஆரம்பிக்கவில்லை? இத்தகைய கல்லூரியை நிறுவுவதற்கு ஏராளமான பலம், பணம், இடம், உபகரணங்கள் முதலியன கிடைக்காது என்று ஆட்சேபனை கூறலாம். பணத்தைப் பொறுத்த மட்டில் சர்க்காரும் நமது பிரதம அதிதியும் சிறிது அக்கரை எடுத்துக் கொண்டால் அவ்வளவு கஷ்டம் இராது. இடத்திற்கு, புதிய கட்டிடங்கள் கட்டும் வரை வாடகைக்கு கட்டிடங்கள் வாங்கிக் கொள்ளலாம். மேற்கொண்டு காட்டு இலாக கட்டிடத்தையும் உபயோகிக்கலாம். உபகரணங்களைப் பொருத்தமட்டில், நானே ஒரு பகுதி தருவதற்குத் தயாராக இருக்கிறேன். இவைகள் போதும் ஆரம்பிப்பதற்கு.

நமது மாணவிகளுக்கு குடும்ப சாஸ்திரம் கற்பிக்கப்படுகிறது. அவர்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியில் இதுதான் ஒரு நல்ல பகுதி. ஜெனரல் ஆஸ்பத்திரி, பிரசவ ஆஸ்பத்திரி, பெண்களுக்கு ஹாஸ்டல் முதலியன தேவையாகயிருக்கலாம். ஜெனரல் ஆஸ்பத்திரியும் பிரசவ ஆஸ்பத்திரியும் இங்கேயிருக்கின்றன. ஹாஸ்டல் நிறுவுவதற்குத் தாராளமாக நன்கொடை கொடுக்கத் தகுந்த கொடை வள்ளல்களுமிருக்கின்றனர். நமது பிரதம அதிதி அவர்களும், சர்க்காரும், பல்கலைக்கழகத்தாரும் ஒத்துழைத்து வேண்டிய உதவியளிப்பதாக உறுதி கூறினால் போதும். டாக்டர் சர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் கவனம் எடுத்துக்கொண்டால் இவைகளைச் செய்து முடிப்பது அவ்வளவு கஷ்டமாகாது என்பது எனது நம்பிக்கை.

பின்னர் டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் தோழர் ஜி. டி. நாயுடு அவர்களின் உபசாரங்களுக்குத் தக்க பதிலளித்து கல்வித் துறையில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், இது பற்றி பல்கலைக்கழகத்தார் யோசித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

பலத்த கைதட்டுதலுக்கிடையே தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள், மெக்கானிகல், எலக்ட்ரிக்கல், சிவில் இஞ்சினீரிங் முதலிய துறைகளில் பட்டம் பெறும் கல்வி கற்பிக்கும் கல்லூரியை ஆரம்பிக்க 2 லட்சம் ரூபாய் நன்கொடை யளித்தார். இவ்வருடமே கல்லூரி ஆரம்பிப்பதாயிருந்தால், யுத்த முடியுமவரை தாமே கட்டிடமும் கொடுத்துதவுவதாக வாக்களித்தார்.

கவி பாரதிதாசன் நிதி

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களுக்கு வைக்கமளிக்கவும் நமது நன்றியறிதலை காட்டவும் நல்ல தருணம் வாய்த்துள்ளது. பாரதிதாசன் நிதிக்கு தாராளமாக பணம் கொடுத்துதவுங்கள்.

மேற்படி நிதிக்கு பெரியார் அவர்கள் ரூ. 150ம் திண்டுக்கல் தோழர் மந்திரன் அவர்கள் ரூ. 101ம் கல்லாரப்பட்டி தோழர் லட்சுமணஞ் செட்டியார் ரூ. 101ம் நன்கொடையளித்துள்ளார்கள். மற்றவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

N கிருஷ்ணராஜ் செட்டியார்,
நாமக்கல், சேலம் ஜில்லா

திருவாரூர் தொண்டமண்டல திராவிட மாணவர் மாநாடு

1-5-45 காலை 9 மணிக்கு திருவாரூர் புலைகவண்டி நிலையத்தில் தலைவர்களை வரவேற்று மேளதாளங்களுடன் வாழ்த்தொலி முழங்க ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.

9½ மணிக்கு தோழர்கள் இராமநாதன், வீரமணி ஹனீபா இவர்கள் இன்னிசையுடன் மாநாடு துவங்கிற்று. தோழர் இரா. சொக்கப்பா அவர்கள் (குடந்தைக் கல்லூரி) உணர்ச்சிமிக்க உரையாற்றி செங்கொடியை உயர்த்தினார்.

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் மு. கருணாநிதி அவர்கள் திராவிட உரிமைப் போருக்கு வரவேற்பு கூறி வரவேற்புரை நிகழ்த்தினார். சிறுமி-இந்திராணி முதலியவர்களின் ஆமோதிப்புப் பேச்சினூடே தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையேற்று ஆணித்தரமான அறிவுரை நிகழ்த்தி திராவிட நாட்டைப் பெறும் போரிலே மாணவர் ஈடுபடவேண்டிய அவசியத்தை விளக்கினார்.

திராவிடநாட்டுப் படத்தை தோழர் திராவிடமணி பி. ஏ., அவர்கள் திறந்து வைத்தார்.

"என்ன வேண்டும்" என்ற தலைப்பில் புலவர் இளங்கோ திராவிடத்தில் தன்மானம் வேண்டும் என்று விரித்துரைத்தார்.

பிற்பகல் நிகழ்ச்சி 3 மணிக்கு ஆரம்பமாயிற்று. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் 'இளைஞரின் எழுச்சி' பற்றி தோழர் தவமணிராசன் அவர்களும், "போர்க்களம் நோக்கி" என்பது பற்றி தோழர் வீரமணி அவர்களும், "வரவேற்பு மாலையில்" என்ற தலைப்பில் தோழர் இளம்வழுதி அவர்களும், "மாணவர் கேட்டு" என்ற தலைப்பில் தோழர் ஜனார்த்தனம் பி. ஏ., அவர்களும் கருத்துத் துலங்க வீரங்கொப்பளிக்க விரிவுரையாற்றினார்கள். தலைவர் அவர்களின் முடிவுரைக்குப் பின் அடைந்தேதீருவோம் திராவிட நாடு! என்ற ஒலியுடன் மாநாடு 6½-க்கு கலைந்தது.

பொதுக் கூட்டம்

அன்று மாலை 7 மணிக்கு ஓடம்போக்கி ஆற்றில் மாபெரும் பொதுக் கூட்டம் கூடிற்று. மன்னார்குடி தோழர் பாபு அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்களான ஆசிரியர் டேவிஸ் பி. ஏ., எல். டி., குழந்தையன், சனார்த்தனம், தவமணிராசன், சம்பத், இளம்வழுதி, மதியழகன், கா. சு. மணி ஆகியோர் பேசினார்கள்.

சனார்த்தனம் அவர்கள் கம்யூனிஸ்ட் [illegible] கேள்வி-

சுதேச சமஸ்தானங்களில் ஆலயப்பிரவேசம்

குவாலியர் சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் இருக்கும் எல்லா கோவில்களிலும் ஆதிதிராவிடர்கள் பிரவேசிக்கலாம் என்று சமஸ்தான சர்க்கார் உத்திரவிபோட்டு விட்டார்கள். (விடுதலை)

உறையூரில் பொதுக்கூட்டம்

15-5-45 செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு பஞ்சவர்ணேஸ்வரன் கோயில் தெருவிலுள்ள சவுண்டேஸ்வரி அம்மன் கோயில்முன் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். அப்பொழுது புலவர் அண்ணாமலை எ. கே. பாஷா, டி. கே. சீனிவாசன் திராவிட மாணவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள் அனைவரும் தவறாமல் வரவும். தோழர் தைரியம் இன்னிசைப்பாடுவர். ஒலிபெருக்கி உண்டு.

கெ. சுந்தரம்,
செயலாளர் திராவிட இளைஞர் கழகம், உறையூர்.

தோழர் பி. ஷண்முகவேலாயுதம்

ஈரோடு தோழர் பி. ஷண்முகவேலாயுதம் 7-5-45ந் தேதி முதல் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

களுக்குத் தக்க பதில் கூறினார். இரவு 11-30 மணிக்கு செயலாளர் அரங்கண்ணல் நன்றிகூறக் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள்

1. பள்ளிப் பாடப் பகுதிகளில் பகுத்தறிவுக்கேற்ற பகுதிகளை அமைக்குமாறு கல்வியிலாகாவைக் கேட்டுக்கொள்கிறது.

2. விவசாய வருமான வரியை ஆகாயப்போது நிலவரியைக் குறைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

3. குடந்தை சந்தசாமி மூப்பனார் பெரியாரை ஆதரிப்பவர்களோ அவருக்கு ஒரு கட்சியோ இல்லையென்று சர்க்காரிடம் கூறியதை வன்மையாகக் கண்டிப்பதோடு அவரது நிலைக்கு இரங்குகிறது.

4. திருவாரூர் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் வேலாயுதம் பிள்ளை அவர்கள் ஆரியத்திற்கு தனிச் சலுகையும், தமிழுக்கும் தமிழருக்கும் எதிர்ப்பையும் அளிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது.

5 இரா. சத்தியேந்திரன் தாயாரும் சிவசி இரத்தினவேல் தம்பியும் இறந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கிறது.

திருமணங்கள்

13-5-45ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணிக்குமேல் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் தலைமையில், தோழர் பொன்னுசாமி அவர்களின் குமாரர் பி. பூங்காவனம் அவர்கட்கும், தோழர் எ. ஷண்முக சாமியார் அவர்களின் குமாரத்தி எஸ். கிருஷ்ணவேணி அம்மையார்க்கும், பறங்கிமலை இரயில்வே ஸ்டேஷன் ரோடு 28வது எண்ணுள்ள இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம், நடைபெறும். 'தமிழ் உலக' ஆசிரியர் டி. எம். பார்த்தசாரதி, தோழர் அன்பழகன், பி. ஏ., (ஆனர்ஸ்), என் வி. நடராஜன் மற்றுமுள்ளவர்களும் தமிழர் திருமணம் என்பதைப்பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

* *

சென்னை தோழர் சி. மஹாதேவ முதலியார் மகன் தோழர் எம். விட்டல்ராவுக்கும் தோழர் ஆர். சபாபதி முதலியார் மகள் தோழர் கமலாபாய்க்கும் 17-5-45ந் தேதி பேரூர் தலூகா செத்பட்டிலுள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அதுசமயம் தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் 'சீர்திருத்த திருமணம்' என்பதுபற்றி பேசுவார்.

* *

குளூர் திராவிடர் கழக காரியதரிசி தோழர் எம். கந்தசாமிக்கும் தோழர் நாகம்மைக்கும் மணமகன் இல்லத்தில் 27-5-45-ந் தேதி காலை 10 மணிக்கு திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களால் திருமணம் நடத்திவைக்கப்படும். புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் 'தமிழர் திருமண முறை' என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார். அனைவரும் வரக் கோரப்படுகிறார்கள்.

இயக்கத் தோழர்கள் இதையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு கலந்துகொள்ள வேண்டுமாய் வேண்டப்படுகிறது.

பொதுக் கூட்டம்

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு ஆபீசுக்கு முன்புறத்தில் 27-5-45 மாலை 5 மணிக்கு பழையகோட்டை இளைய குமார பட்டக்காரர் தோழர் என். அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களும், புரட்சிக்கவி பாரதிதாசன், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், குடந்தை எஸ். தவமணிராசன் முதலியவர்களும் திராவிடர் கழகம் என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

* *

ராஜபாளையம் தோழர்கள் நவமணி-செல்லம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தை முன்னிட்டு "குடி அரசு"க்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டிருக்கிறது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாவட்டந்தோறும் மாணவத்தோழர்கள்

திருநெல்வேலி: தோழர்கள் புலவர் நா. மு. மாணிக்கம், சிதம்பரம் ராமசாமி, கே. தியாகராசன், ஏ. பி. ஜனார்த்தனம் பி. ஏ., ஆகியோர் 8-5-45 முதல் இம் மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். தத்தம் ஊர்களில் கூட்டம் நடத்த விரும்புவோர் சாத்தான்குடி தோழர் எம். எஸ். சிவசாமிக்கு எழுதவும்.

மதுரை: தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், கே. தியாகராசன், து. பெரியசாமி, ஹமீபுல்லா, ஆர். ராமானுஜம் ஆகியோர் இம்மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

15-5-45-ந் தேதி மேலூர், 16-ல் நத்தம், 17-ல் கொட்டாம்பட்டி, 18-ல் சிறுகுடி, 19-ல் தாமரைப்பட்டி, 20-ல் மதுரை, 21-ல் ஓய்வு (மதுரை) 22-ல் பாலமேடு, 23-ல் வாடிப்பட்டி, 24-ல் சின்னாளப்பட்டி, 25-ல் கல்வார்பட்டி, 26-ல் திண்டுக்கல் 27-ல் நிலக்கோட்டை, 28-ல் வத்தலக்குண்டு, 29-ல் சோழவந்தான், 30-ல் மேலக்கால், 31-ல் (ஓய்வு) மதுரை.

கூட்டம் நடத்த விரும்புவோர் அடியிற்கண்ட முகவரிக்கு எழுதவும்:

சி. முத்திருளாண்டி, செயலாளர், திராவிடர் கழகம், 55-D, புட்டுதோப்புரோடு, மதுரை.

திருச்சி: தோழர்கள் புலவர் பி. குழந்தையா, இராமையா, சுப்பையன், எஸ். சுந்தரமூர்த்தி, எச். பி. இதயதுல்லா ஆகியோர் பின் கண்டவாறு சுற்றிவருகிறார்கள்.

11-5-45 ந் தேதி சீரங்கம், 12-ல் மண்ணச்சநல்லூர், 13-ல் மேலகற்கண்டார் கோட்டை, 14-ல் உறையூர், 15-ல் குளித்தலை, 16-ல் கரூர், 17-ல் முசிறி மேலும் கூட்டம் நடத்த விரும்பும் தோழர்கள் உடனே தோழர் டி. பி. வேதாசலம் அவர்கட்கும், எமக்கும் எழுதவும்.

சேலம்: தோழர்கள் இரா. இளம்வழுதி, புலவர் நன்னன், வில்லாளன், என். ஜி. இராசன், ஏ. முகமது இபுராகிம் ஆகியோர் சேலம் மாவட்டத்தில் 8-5-45 முதல் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்கள். கூட்டம் நிகழ்த்த விழையும் தோழர்கள் உடனே எமக்கும் சேலம் செவ்வாய்ப்பேட்டை, திராவிடர் கழகச் செயலாளர், எம். எல். தமிழ் மணிக்கும் எழுதவும்.

கோயமுத்தூர்: தோழர்கள் எஸ். தனமணி இராசன், புலவர் வீரவாகு, ஈ. வி. கே. செல்வம், அப்துல் வகாப், வீரமணி (10 வயது) ஆகியோர் 15-5-45 முதல் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். கூட்டம் நடத்த விரும்புவோர் உடனே எமக்கு எழுதுக.

தஞ்சை:

தோழர்கள் து. மா. பெரியசாமி புலவர் ச. சு. மணியம், ப. திருஞானசம்பந்தம், ப. வெற்பாசன், அரங்கண்ணல் ஆகியோர் நாகை தாலூகாவில் கீழ்க்கண்டவாறு சுற்றிவருவார்கள்:

13-5-45 தேவூர், 14ல் ஆழியூர், 15ல் சிக்கல், 16ல் அந்தணப்பேட்டை (மஞ்சக்கொல்லை). 17ல் நாகை, 18ல் ஓய்வு (நாகூர்). 19ல் நாகூர், 20ல் திருப்பூண்டி 21ல் வேளாங்கண்ணி (திருத்துறைப்பூண்டி தாலூகா), 22ல் கீழையூர் 23ல் தலைஞாயர், 24ல் திருத்துறைப்பூண்டி 25ல் தாணிக்கோட்டகம்; மேலும் திருத்துறைப்பூண்டி, நன்னிலம் தாலூகாக்களில் கூட்டம் போட விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதவும்.

வி. எஸ். பி. யாகூப், C/o கோவிந்தராசு, திராவிடர் கழகம், நாகூர்.

தென்னாற்காடு: தோழர்கள் புலவர் இளங்கோ, புலவர் எழில் நிலவன், சிவபாக்கியம் அம்மையார், செங்குட்டுவன், இளவழகன் ஆகியோர் கடலூர், விழுப்புரம், திண்டிவனம் தாலூக்காக்களில் 8-5-45 முதல் சுற்றி வருகிறார்கள். விபரத்திற்கு அடியிற்கண்ட முகவரிக்கெழுதவும்.

ஆ. திராவிடமணி பி. ஏ., திராவிடர் கழகம், இருசப்பசெட்டித் தெரு, கடலூர். O. T.

இராமநாதபுரம், வடஆற்காடு, புதக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கூட்டம் அமைக்க விரும்பும் தோழர்கள் உடனே எமக்கெழுதினால் விரைவில் மாணவர் குழுவினை அனுப்பிவைக்கப்படும்.

செயலாளர், திராவிட மாணவர் பிரசாரக் கழகம், ஈரோடு.

ஈரோடு சித்திக் தொண்டர் படை

2-5-45-ந் தேதி இரவு 10 மணிக்கு திராவிடர் மாணவர் சங்கக் கட்டிடத்தில் தோழர் எஸ். ஆர். சந்தானம் தலைமையின் கீழ் சித்திக்தொண்டர் படை நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்: ஏ. ஷேக்தாவூது சாயபு.

உபதலைவர்: ஏ. தமீமு சாயபு.

காரியதரிசிகள்:- ஏ. கே. எம். ஜக்கிரியா, எம். எஸ். வகாப் சாயபு.

பொக்கிஷதார்:- ஏ. எம். சுல்தான்.

தொண்டர்படை கேப்டன்கள்: ஈ. வெ. கி. செல்வம், ஏ. முகமது யூசுப்.

நிர்வாக அங்கத்தினர்கள் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 40 பேர் கொண்ட ஒரு தொண்டர் படை நிறுவப்பட்டது. அதுசமயம் தோழர்கள் ஏ. மைதீன் பாஷா சாயபு, ஈ. வெ. கி. சம்பத், எம். அபீபு சாயபு, எம். எஸ். ஏ. வகாப் சாயபு, எஸ். எஸ். ஆரோக்கியசாமி, மதியழகன், ஜனார்த்தனம் தொண்டர் படையின் சேவை, தொண்டர் படையின் அவசியம் என்பவைகளைப் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். தொண்டர் படைக்குப் போஷகர்களாக ஜனாப் ஏ. மைதீன் பாஷா சாயபு, எம். சி., S. R. சந்தானம், E. V. K. சம்பத் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

19-4-45-ல் தஞ்சை திராவிட மாணவர் கழகக் கூட்டம் தோழர் பி குழந்தையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், சிவராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

மேற்குப் போர்முனையில் அடைந்த
வெற்றிக்கு நன்றி செலுத்துமுகத்தான்
★
(துருப்புகளின் நலன்களுக்கு என்ற தலைப்பில்)
மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு மீண்டும்
பணம் கொடுத்து
★
கிழக்குப் போர்முனையிலும்
விரைவில் வெற்றிகாண உதவுங்கள்.

குடி அரசு

1945-ஞு மே-மீ 12-உ

யுத்த வெற்றி

உலக மகாயுத்தம் என்று சொல்லப்படும் யுத்தமானது ஐரோப்பாக் கண்டத்தைப் பொறுத்தவரையில் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. இந்த வெற்றியானது இதன் துவக்கநாள் முதல் வெற்றிச் சேதி எட்டியகால் வரை நாம் ஆசைப்பட்டதும், இந்த முடிவு இப்படித்தான் இருக்கும் என்று சிறிதும் தடையோ சந்தேகமோ இன்றி தீர்மானித்துக்கொண்டு இருந்ததுமாகும்.

இந்த முடிவைக்காண, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளும் மக்களும் பெருந்துன்பமும் கஷ்டமும் அடைந்தன என்பதில் சந்தேகமில்லை. நாம் அடிமை நாட்டு மக்களாய் இருக்கவேண்டிய நிலையில் இருக்கின்றவர்களாதலால், இந்த வெற்றி பெற்ற யுத்தம் அச்சுநாடு, நேசநாடு யுத்தமாக சொல்லப்படவேண்டியதாய் இருந்து, அச்சுநாடுகளும் நேசநாடுகளுமே யுத்தக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி வரவேண்டியதாயிற்று என்பதோடு, இந்தியாவைப் பொறுத்தவரை, குறிப்பாக திராவிடநாட்டைப் பொறுத்தவரை யாதொரு பெருங் கஷ்டமும் நஷ்டமும் இல்லாமல் வெற்றிச் சேதியைக் கேட்டு மகிழ்ச்சி அடையவேண்டிய நிலையில் இருக்கவேண்டியதாயிற்று. என்றாலும், யுத்தத்தின் பயனாய் நம் சகோதரர்கள் இராணுவத்தில் சேர்ந்து சிலர் உயிர்துறக்க நேர்ந்தாலும், பெரும்பான்மையான மக்கள் இராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற்று யுத்த முனையில் இருந்து தங்கள் வீரப்பிரதாபங்களைக் காட்டி பெருமை பெற்று சரித்திரத்தில் நம் நாட்டுக்கு நிரந்தரமான புகழ் இருக்கும்படியான இடம் பெற நேர்ந்தது. இது நமக்கு எதிர்பாராமல் கிடைத்த ஒரு பெரும் பேறு என்றே சொல்லவேண்டும். அவ்வளவு மாத்திரமேயல்லாமல் பொருளா[illegible]யிலும், யுத்தத்திற்கு ஆக ஒரு சில கோடி ரூபாய்கள் நன்கொடை அளித்தோம் என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் காரணமாய் யுத்தத்திற்கு ஆக நாம் அளித்த நன்கொடைத் தொகைக்கு ஒன்றுக்குப் பல பத்துப் பங்காக நாடு பொருளாதாரத் தொகையில் பெருக்கம் அடைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. யுத்தத்தின் பயனாக வாழ்க்கைத் துறையில் சிற்சில சமயங்களில் நெருக்கடி ஏற்பட்டதாகக் காணப்படினும் பொதுவாக யுத்தத்தின் பயனாய் நம் வாழ்க்கைத் திட்டம் ஒரு 10 வருஷ காலப் பெருக்க அளவுக்கு முற்போக்கு அடைந்து எதிர்கால ஆசாபாசங்களும் வளர்ந்து இருக்கிறது என்பது கண்கூடு. யுத்தத்தின் பயனாய் படித்தவர்கள் பாமர மக்கள் ஆகிய இரு சார்பார்களுக்குள்ளும் மூடநம்பிக்கையும் பாமரத் தன்மையும் அடிமை உணர்ச்சியும் ஒரு பெரும் அளவுக்குக் குறைந்து, பொது அறிவும் உண்மையான சுதந்திர உணர்ச்சியும் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு பெருகி இருக்கிறதை மக்கள் ஒவ்வொருவருமே உணருகிறோம். யுத்தத்தின் பயனாய் எதிர்காலம் மிகுதியும் மேன்மையுறும் காலமாகவும் இயற்கையாக ஒரு 25-வருட காலத்தில் வந்து சேரக்கூடும் என்று கருதக்கூடிய முற்போக்கை சகல துறைகளிலும் அடையக்கூடிய நிலைமையையும் பார்க்கிறோம்.

இவ்வளவும் இந்த யுத்த விஷயத்தில் எவ்வித குறிப்பிடக்கூடிய தியாகமும் பொறுப்பும் இல்லாமலும், மேலும் சொல்லவேண்டுமானால் மனித சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவே இருந்துவருகிற பிறவி நாசகாரக் கூட்டமும் அவர்களது அடிமைகளும் யுத்த நன்முயற்சிக்குப் பல தொல்லை கொடுத்தும், ஐந்தாம் படை வேலை உள்பட பல நாச வேலை செய்து வந்தும் அதனால் சிறிதும் பாதகமேற்படாமல் இந்த அளவிடற்கரிய நன்மை ஏற்பட்டதானது, மிகுதியும் புளகாங்கிதம் ஏற்பட்டு பாராட்டத்தக்க சம்பவமாகும்.

வெற்றியடைந்த நாட்டினர், குறிப்பாக பிரிட்டிஷார் தங்கள் இயற்கைக் குணங்களின்படி ஆரியர்களையும், ஆரியரல்லாத செல்வவான்களையும் மாத்திரமே சரிப்படுத்திக் கொண்டால் இனி இப்படிப்பட்ட ஒரு யுத்தம் ஏற்படும் வரை தங்கள் வாழ்வு உறுதியென்று அகம்பாவஉணர்ச்சியுடனும் அலட்சிய உணர்ச்சியுடனும் இருந்து, பழையபடியே பார்ப்பனருக்கும் படித்தவனுக்கும் உத்தியோகமும் பதவியும், செல்வவான்களுக்குப் பட்டமும் பண வருவாயும் செய்து கொடுத்து பாமர மக்களை வஞ்சித்து வதைத்துக் கொண்டு இருக்காமல் தங்கள் தப்பிதத்தை உணர்ந்து கடமையை அறிந்து பல துறையிலும் கீழ்மைப் பட்டுக் கிடக்கும் மக்களை சம நிலைக்குக் கொண்டுவர முயற்சிப்பதன் மூலம் தங்களது தன்மையை காட்டிக்கொள்வார்களாக.

ஆரியர்களுக்கும், திராவிடர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஒப்பந்த 'மாநாடு'

சென்னையில் திராவிட மக்களில் உள்ள பட்டதாரிகளும், சில செல்வந்தர்களும், சில சமயசஞ்சீவிகளும், சில பொதுநலத்தைச் சொல்லிக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களும், பணம் கொடுக்கிறவர்கள் பக்கம் சேர்ந்து பணம் வாங்கிகொண்டு, பணம் கொடுத்தவர்களால் கட்டப்பட்டவர்களையும் பணம் கொடுக்காதவர்களையும் வைது வாழும் சிலரும் தங்களை பார்ப்பனரல்லாத மக்களுக்கு பிரதிநிதிகள் என்றும், ஜஸ்டிஸ்கட்சியார் என்றும் போலியாய் சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட தாங்கள் கூடியிருக்கும் கூட்டுப்பதவிப் பட்டம் வியாபார கம்பெனிக்கு தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் என்றும் ஜஸ்டிஸ் கட்சி என்றும், அதாவது ஏதோ ஒரு கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டு சில விஷயமறியாத மக்களையும் ஆசைவார்த்தை சொல்லி சேர்த்துக்கொண்டு, இம்மாதம் 6-ந் தேதி சென்னையில் போலீஸ் பந்தோபஸ்துடனும் சர்க்கார் செல்வாக்குடனும் ஒரு கூட்டம் கூட்டி இருக்கிறார்கள்.

அக்கூட்டத்தின் முக்கியமான நடவடிக்கைகள்:- ஆரியர்களோடு

ரோஜா முத்தையா

திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

12-5-45ந் தேதி வரை 32182 அங்கத்தினர்கள் ரூ. 3179—4—0 சந்தா

மே மாதம் 12-ந் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் இரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. கோவை	5125	9. சென்னை	1700
2. தஞ்சை	5616	10. மதுரை	1432
3. சேலம்	4460	11. செங்கல்பட்டு	831
4. திருச்சி	3886	12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு)	192
5. இராமநாதபுரம்	2268	13. பெங்களூர்	158
6. திருநெல்வேலி	2114	14. புதுக்கோட்டை	95
7. தென் ஆற்காடு	1877		
8. வட ஆற்காடு	1828		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 32182. சந்தா ரூ. 3179 4-0

ஒப்பந்தம் செய்துகொண்டு சர்க்காருக்கு முன்னோடும் பிள்ளையாய் இருந்து, நாட்டையும் ஏழைப் பாமர மக்கள் நலத்தையும் பொது சுயமரியாதையையும் மாற்றார்களுக்கு விட்டுக்கொடுத்து, தனிப்பட்ட சொந்த சுயநலம் பெறும்படியான மாதிரியில் பேசி நடந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு இவ்விஷயத்தைச் சமர்ப்பித்துவிட்டுக் கலைந்திருப்பது தவிர வேறு குறிப்பிடத் தகுந்த காரியம் ஒன்றும் இல்லை என்பதை அங்கு கூடினவர்களிலிருந்தும் அந்நடவடிக்கையில் இருந்தும் பொது மக்கள் உணர்ந்திருக்கலாம்.

அங்கு கூடினவர்களில்சிலமுக்கியஸ்தர்களாகக் காட்டிக் கொண்டவர்களும் மற்றும் பெரும்பான்மையோரும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து பயன்பெற்று, கட்சியின் நெருக்கடியான காலத்தில் கைவிட்டும், வெளியேறியும், எதிர்ப்பாய் இருந்தும், விஷமப் பிரச்சாரம் செய்து கொண்டு விலகி இருந்து பொது மக்களிடம் செல்வாக்கில்லாமல் தனித்து இருந்தவர்களும் ஆகும் என்பது அங்கிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் மக்களையும், காரியங்களில் கலந்து கொண்டதாகக் காட்டப்பட்டிருக்கும் மக்களையும் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

எனவே, இவர்களது இந்த ஒழுங்கற்ற காரியத்திற்கும் கேவலமான காரியத்திற்கும் காரணமும், இவர்களது தன்மையையும் பின்னால் தெரியலாம். என்றாலும் ஆங்காங்குள்ள திராவிடக் கழகத்தார் (ஜஸ்டிஸ் கட்சியார்) நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் போட்டு சேலம் மாநாட்டில் S. I. L. F. என்பது திராவிடன் பெடரேஷன் என்றும் தெ. இ. ந. உ. சங்கம் என்றிருந்தது, திராவிடர் கழகம் என்றும் நடைமுறைப்படியும் சட்டப்படியும் மாற்றப்பட்டதென்றும், அதற்குதான் ஜஸ்டிஸ்கட்சி என்ற பெயர் என்றும், இந்த 6ந்தேதி கூட்டம் ஜஸ்டிஸ்கட்சி கூட்டமாகாதென்றும், அதன் நடவடிக்கைகள் ஜஸ்டிஸ்கட்சி நடவடிக்கைகள் ஆகாதென்றும், ஜஸ்டிஸ்கட்சியாக அவர்களை சர்க்காரும் பொதுமக்களும் கருதக்கூடாது என்றும் தீர்மானங்கள்செய்து சென்னை கவர்னருக்கும், பிரதம காரியதரிசிக்கும், டெல்லி வைஸ்ராய்க்கும், லண்டன் இந்தியா மந்திரிக்கும், பிரதம மந்திரிக்கும் பத்திரிகைகளுக்கும், தந்திகளும், தபால்களும் ஆகிய இரண்டும் அல்லது ஏது சாத்தியமோ அதையும் உடனே நாளை முதற் கொண்டே செய்ய வேண்டுமாய் ஆங்காங்குள்ள ஜஸ்டிஸ் கட்சி கழகங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 4-5-45 ல் ஈரோடு திராவிட மாணவர் பிரச்சார பயிற்சி வகுப்பிலும், 5-5-45-ந் தேதி திருப்பூர் திராவிடர் கழக ஆண்டுவிழாவிலும், 6-5-45-ந் தேதி ஈரோடு திராவிட மாணவர் மாநாட்டிலும் கலந்து கொண்டு 8-ந் தேதி காலை ஏற்காட்டுக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளச் சென்றுவிட்டார். இப்பொழுது அவர்களின் உடல் நிலை குணமாகி வருகிறது. இம்மாதம் முடிய அங்கே இருப்பார்.

தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு!

சென்னை.

எதிர்பாராத வகையில், திடீரென ஏற்பட்ட தவிர்க்கமுடியாத காரணத்தினால், இம்மாதக் கடைசியில் நடைபெற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த "சிவாஜி" நாடகம் மீண்டும் ஒத்திவைக்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டதற்கு பெரிதும் வருந்துகிறோம்.

ஆனால் சிவாஜி நாடகம் கட்டாயம் தவறாமல் நடைபெறும் என்பது உறுதி. ஆனால், சமயசந்தர்ப்பங்களால் அது இம்மாதமே நடத்த மனது இடங்கொடுக்கவில்லையாதலால், இன்னும் இரண்டு மாதங்களுக்குப் பிறகே அதாவது ஜூலை மாதக் கடைசியில், நடத்துவதென தளபதி அண்ணாதுரை அவர்களுடன் கலந்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

டிக்கட்டில் யாதொரு மாற்றமும் கிடையாது. இப்போது வாங்கியுள்ள டிக்கட்டுகளையே அவர்கள் நாடகத்தன்று கொண்டுவரலாம். ஆனால் டிக்கட் வாங்கியுள்ளவர்களில் யாராவது பணத்தைத் திருப்பிக் கேட்டாலும் கொடுத்து விடப்படும். மற்ற தோழர்கள் தயவுசெய்து டிக்கட்டுகளை பத்திரமாக வைத்திருக்க வேண்டுகிறோம்.

கடைசியாக, இவ்வித நிலைமை ஏற்பட்டதற்கு மன்னிக்கவேண்டுவதுடன், நாடகம் மட்டும் கட்டாயம் தவறாமல் நடைபெறும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்கான புதிய உடுப்பு, சீன் முதலிய அனைத்தும் தயாராயிருக்கின்றன.

டி. சண்முகம், தலைவர்.
என். வி. நடராசன், காரியதரிசி.

திருப்பூர் திராவிடர் கழகம்

5-வது ஆண்டுவிழா

ஷை ஆண்டு விழா திருப்பூர் கஜலட்சுமி தியேட்டரில் 5-5-45-ந் தேதி காலை 9 மணிக்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புலவர் தோழர் நா. மு. மாணிக்கம் நீதிக்கட்சிக் கொடியை ஏற்றுவித்தார். புதுவை தோழர் நக்கீரனார் எம். ஏ., திறப்புவிழா வாற்றினார். பின் பெரியார் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. பெரியார் அவர்கள் இரண்டு மணி நேரம் அரிய சொற்பொழிவாற்றினார். கழகச் செயலாளர் தோழர் குரு. இராமலிங்கம் அறிக்கை படித்தார். கழகத் தலைவர் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் நன்றிகூறினார்.

பொதுக் கூட்டம்

அன்று மாலை 7-30 மணிக்கு திருப்பூர் நொய்யலாற்றில் திராவிடர் கழகச் சார்பாக பெரியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் அவர்கள் முன்னுரையாக சுமார் 2 மணி நேரம் பேசினதும் மழை வந்துவிட்டதால் நன்றி கூறலுடன் கூட்டம் கலைந்தது.

இரண்டாம்நாள் நடவடிக்கை

திருப்பூர் திராவிடர் கழக நூல்நிலைய இலவசப் படிப்பகத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழா 6-5-45-ந் தேதி காலை 9 மணிக்கு கஜலட்சுமி தியேட்டரில் புலவர் தோழர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் எ. பி. ஜனார்த்தனம் பி. ஏ., திறப்பு விழா சொற்பொழிவாற்றினார். தோழர் நக்கீரனார் தமிழ்க்கொடி ஏற்றினார். செயலாளர் அறிக்கை படிக்க தலைவர் பேருரை செய்ய நன்றி கூறலுடன் விழா இனிது நிறைவேறியது.

பொதுக் கூட்டம்

திருப்பூர் நொய்யலாற்றில் 6-5-45-ந் தேதி மாலை 7 மணிக்கு தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் தோழர் நக்கீரனார் அவர்களும், மற்றும் அறிஞர்களும் திராவிட மக்கள் சமூக முன்னேற்றம் என்பது பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

5, 6 தேதிகள் இரண்டு நாட்களிலும் தலைவர்களுக்கும் மற்றும் இயக்க அன்பர்களுக்கும் திருப்பூர் திராவிடர் கழக நிர்வாக அங்கத்தினர் ஜவுளி வியாபாரம் தோழர் சி. அருணாசலம் செட்டியார் நன்கு விருந்திட்டு உபசரித்தார்.

பொதுநலச் சங்க மாநாடு

பழனித் தாலுகா, சின்னக்காம்பட்டியில் 21 22-5-45-ந் தேதி பொதுநலச் சங்கம் (மாநாடு) பழனி அடிகளார் சிவநேசம் அவர்கள் தலைமையில் நடைபெறும். பழையகோட்டை இளையருமாரப்பட்டக்காரர் தோழர் ந. அர்ச்சுனன் அவர்கள் ஷை மாநாட்டைத் திறந்துவைப்பார்கள். பல அறிஞர்கள் இரண்டு நாட்களும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

திராவிட இளைஞர் மாநாடு

22-4-45 ஞாயிறு பகல் 3-மணிக்கு அலலூர் பேட்டையில் கடலூர் ஆ. திராவிடமணி முன்னிலையில் நடைபெற்ற பகுத்தறிவாளர் கழகக்கூட்டத்தில் தென்னாற்காடு மாவட்ட திராவிட இளைஞர் மாநாடு ஜூன் மாதத்தில் நடத்துவதெனவும் பெரியார் ஈ. வெ. ராமசாமி, தளபதி அண்ணாதுரை, சென்னை சிவரத்தினம் மற்றும் பலரை அழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தோழர்கள் எ. கே. ஏ. சவுண்டைய செட்டியார் தலைவராகவும் கே. என். இளஞ்செழியன் செயலாளராகவும் மற்றும் ஐவர் உறுப்பினராகவும் கொண்ட மாநாட்டு வரவேற்புக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. மாநாட்டு அலுவல்களை கடலூர் ஆ. திராவிடமணி கவனித்து வருவார்.

உடன் 5. 30 மணிக்கு தோழர் சவுண்டைய செட்டியார் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கடவுள், சடங்கு என்பதைக் குறித்து தோழர் ஆ. திராவிடமணி விரிவாகப்பேசினார். தோழர் மல்லிகார்ச்சுனன் நன்றி கூறினார்.

இதற்கு என்ன அருத்தம்

காங்கரசும் போர் முயற்சி ஒத்துழைப்பும்

எல்லைப்புற காங்கிரஸ் மந்திரி சபையின் பிரதமர் யோக்கியமாய் உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டார்.

அதாவது 'நான் பதவி ஏற்றுக்கொண்டதனது போர் முயற்சிக்கு உதவுவதாகவே ஆகும்'' இது 10, 11-ந் தேதி 'விடுதலை'யில் இருக்கிறது.

ஆகவே காங்கிரஸ்காரர்கள் பழைய கொள்கையில் இருந்து இறங்கிவந்து பதவி ஏற்றுக்கொண்டிருப்பதும், பதவிக்கு இடமில்லாத இடங்களில் இதைவிட கீழான நிலைமைக்கு வந்தாவது பதவி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அடிக்கிறார்கள் என்பதும் இதிலிருந்து நன்றாய் விளங்கும்.

இப்படி இவர்கள் அடிப்பதற்குக் காரணம், பிரிட்டிஷார் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்கின்ற முடிவு அவர்களுக்கு ஏற்பட்டதினாலல்லாமல் வேறு இல்லை. எனவே, காங்கிரசின் வீராப்பும் மானமும் இன்று சந்தி சிரிக்கிறது என்பதை காங்கிரசார் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இதற்கு என்ன அருத்தம்?

கோவை ஜில்லா திராவிடர் கழகம் ஈரோடு

நிர்வாகக்கமிட்டிக்கூட்டம்

ஷை கூட்டம் 15-5-45-ந் தேதி மாலை 5 மணிக்கு ஈரோடு கச்சேரி வீதி 42-ம் நம்பர் கழகக்கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் கோவை ஜில்லா திராவிடர் கழக 2-வது மாநாடு நடத்துவதுபற்றி யோசிக்கப்படும். ஆதலால், நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் அவசியம் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

P. பழனிச்சாமி, S. R. சந்தானம்,
செயலாளர்கள்.

தேவை

"குடி அரசு" "ஜஸ்டிஸைட்" வாரப் பத்திரிகைகளை வ. ஆ. வேலூரில் விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்.

யுத்தக் குறிப்புகள்

1939

செப்டம்பர் 1:- போலந்து மீது ஜெர்மன் படையெடுப்பு. 3:-பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனிமீது போர் தொடுத்தன.

1940

ஏப்ரல் 9:-டென்மார்க் நார்வே மீது ஜெர்மானியர் படையெடுப்பு.

மே 10:-ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க் மீது ஜெர்மன் படையெடுப்பு. பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் ராஜிநாமா; சர்ச்சில் பிரதம மந்திரியானார். 14:-ஹாலந்து சரணடைந்தது. 28:-கார்விக் விழுந்தது, பெல்ஜிய சைன்யம் சரணடைந்தது. 29:-டன்கர்க் வெளியேற்றம்; பிரிட்டிஷ் துருப்புகளும், பிரஞ்சு, பெல்ஜியத் துருப்புகளும் வெளியேற்றப் பட்டன.

ஜூன் 11:-பிரெஞ்சுத் துருப்புகள் மார்னைக் கடந்து பின்வாங்கின. பிரிட்டன், பிரான்சு மீது இத்தாலி போர் தொடுத்தது. 14:-ஜெர்மானியர் பாரிஸில் நுழைந்தனர். 25:-பிரான்சில் போர் ஓய்ந்தது. ஜெர்மன் சமாதான நிபந்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆகஸ்ட் 4:-சோமாலிலாந்து மீது படையெடுப்பு. 8:-பிரிட்டன் மீது போர்.

செப்டம்பர் 3:- ஆங்கிலோ-அமெரிக்க ஒப்பந்தம். 7:- ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்- 10-ஆண்டு ஒப்பந்தம்.

அக்டோபர் 28:- இத்தாலியர் கிரீஸ் மீது படையெடுத்தனர்.

1941

மார்ச்சு 11:-பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் இரவல்-குத்தகை மசோதாவில் கையெழுத்திட்டார்.

ஏப்ரல் 7:-ஜெர்மானியர் ஏதென்ஸை ஆக்கிரமித்தனர்.

மே 5:-ஹெய்லி செலாஸி அடிஸ் அபாபாவில் நுழைந்தார். 10:-ருடால்ப் ஹெஸ் ஸ்காட்லாந்தில் இறங்கினார். 20:-ஜெர்மனியர் க்ரீட்மீது படையெடுத்தனர்.

ஜூன் 22:-ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியது.

ஆகஸ்ட் 14.-சர்ச்சில், ரூஸ்வெல்டின் அட்லாண்டிக் சாசன அறிவிப்பு.

டிசம் 7:-பேர்ள் ஹார்பரில் அமெரிக்க கடற்படை, ராணுவ, விமானத் தளங்களை ஜப்பான் தாக்கியது. மணிலா, ஷாங்காய், மலேயா, தாய்லந்து, ஹாங்காங் ஆகியவைகளையும் ஜப்பானிய விமானங்கள் தாக்கின. 8:- பிரிட்டனும் டொமினியன் நாடுகளும் ஜப்பான் மீது போர் தொடுத்தன. அமெரிக்கா ஜப்பான்மீது யுத்தப்பிரகடனம் செய்தது; இதாலி ஜெர்மானி, ஜப்பான்மீது சைனா போர் தொடுத்தது; ஜப்பானியர் ஹாங்காங்கைத் தாக்கினர்; தாய்லாந்தில், மலேய எல்லைக்கு அருகில் ஜப்பானியத் துருப்புகள் இறங்கின. 10:- எச். எம். எஸ். பிரின்ஸ் ஆப் வேல்சும், எச். எம். எஸ். ரிபல்சும் மூழ்கின. 11:-இதாலியும் ஜெர்மனியும் அமெரிக்காவுக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்தன. அமெரிக்க காங்கரஸ் ஜெர்மனிமீதும் இதாலிமீதும் போர் தொடுப்பதாகப் பிரகடனம் செய்தது. 26:-வாஷிங்டனில் சர்ச்சில், காங்கரஸ் சபைக் கூட்டத்தில் பேசினார்.

1942

ஜனவரி 3:-பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, நெதர்லண்ட்ஸ், இந்தியா உட்பட 26-நேசங்கள் அச்சு நாடுகளுக்கு எதிராகக் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஜூலை 1:- ஜெர்மனியர் எல் அலமீனை அடைந்தனர். எழு மாத முற்றுகைக்குப் பிறகு ஜெர்மனியர் செபாஸ்டபூலை மீண்டும் கைப்பற்றினர்.

அக்டோபர் 23:- மாண்ட்காமெரி எல் அலமீனில் தாக்குதலை ஆரம்பித்தார்.

நவம்பர் 8:- வடமேற்கு ஆப்பிரிக்காவில் நேசப் படைகள் இறங்கின. கஸாப்ளாங்கா, ஓரன், அல்ஜியர்ஸ் கைப்பற்றப்பட்டன.

1943

ஜனவரி 2:- நேசப் படைகள் பூனாவைக் கைப்பற்றின. 14-24:- கஸாப்ளாங்கா மாநாடு. 16:-ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மீது ஈராக்கின் யுத்தப் பிரகடனம். 18:-லெனின்கிராடு முற்றுகை தகர்ந்தது.

பிப்ரவரி 2:- ஸ்டாலின்கிராடில் ஜெர்மன் எதிர்ப்பு ஓய்ந்தது. ஜெர்மன் 6-வது சைன்யம் அழிந்தது.

ஏப்ரல் 7:- 8-வது சைன்யம் டுனிசியாவில் அமெரிக்கப் படைகளைச் சந்தித்தது. 10:-பிரிட்டிஷ் படைகள் ஸ்பாக்ஸைப் பிடித்தன. 12:-பிரிட்டிஷ் படைகள் ஸோஸீஸைப் பிடித்தன.

மே 11:-அமெரிக்கப் படைகள் அட்டுத் தீவில் இறங்கின. சர்ச்சில் வாஷிங்டன் போய்ச் சேர்ந்தார். சர்ச்சில்—ரூஸ்வெல்ட் சந்திப்பு. 12:-வட ஆப்பிரிக்காவில் அச்சுநாடுகளின் எதிர்ப்பு முறிந்தது. 30:-அட்டுவில் ஜப்பானிய எதிர்ப்பு குலைந்தது.

ஜூலை 9, 10:- ஸிஸிலி மீது நேசப் படையெடுப்பு. இந்தியத் துருப்புகள் தீவின் தென்கரையில் இறங்கின. 25:-முசோலினி ராஜிநாமா; படோக்லியோ இத்தாலியப் பிரதம மந்திரியானார்.

ஆகஸ்ட் 17:-க்யுபெக்கில் சர்ச்சில்-ரூஸ்வெல்ட் சந்திப்பு.

செப் 3:-இத்தாலியத் தாயகத்தில் நேசப் படையிறக்கம்; ஜோத்பூர் காலாட்படைப் பிரிவு ஒன்று, இந்தியத் துருப்புகளுக்குள்ளே முதல் முதலாக அங்கு இறங்கியது. 8:-இத்தாலி நிபந்தனையின்றிச் சரணடைந்ததாக ஐஸனோவர் அறிவித்தார். 11:-இத்தாலியக் கடற்படை சரணடைந்தது. 23:-ஸ்மோலென்ஸ்கை ரஷ்யர் மீண்டும் கைப்பற்றினர்.

அக் 1:-நேப்பிள்ஸ் விழுந்தது. 13:-ஜெர்மன் மீது இத்தாலி போர் தொடுத்தது. 18:-மாஸ்கோவில் அயல்நாட்டு மந்திரிகள் மாநாடு.

நவம்பர் 22:-கெய்ரோ மாநாடு ரூஸ்வெல்டும், சியாங்கை—ஷேக்கும், சர்ச்சிலும் சந்தித்தனர். 28:- டெஹரானில் ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் ஆலோசனை. 29:- ஸ்டாலினுக்கு ஸ்டாலின்கிராட் வாள் பரிசளிக்கப்பட்டது.

டிசம்பர் 24:- ஐரோப்பிய விடுதலைச் சைன்யத்தின் தளபதிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.

ரோஜா முத்தையா

1944

ஜனவரி 23:- ரோமுக்குத் தெற்கே நேசப்படை யிறக்கம்.

பிப்ரவரி 26:- செஞ்சேனை வடக்கே பெய்ப்பஸ் ஏரியையும் ஸ்காவ் ஏரியையும் நோக்கி முன்னேறிற்று.

ஏப்ரல் 3:- ருமேனியாவில் ரஷ்யத் துருப்புகள் பிரவேசம். 12:- செஞ்சேனை ஒடெஸ்ஸாவை விடுவித்தது. 24:- நியூகினிக் கரையில் நேசப்படையிறக்கம்.

மே 12:- இதாலியில் எட்டாவது ஐந்தாவது சைன்யங்களின் தாக்குதல். 17, 18:- காஸினோ விழுந்தது.

ஜூன் 4:- நேசப்படைகள் ரோமை மீட்டன. 6:- வடக்கு பிரான்ஸில் நேசப்படை யிறக்கம். 16:-முதல் பறக்கும் குண்டுகள் தெற்கு இங்கிலாந்து மீது விழுந்தன.

ஜூலை 9:-காயன் பிடிபட்டது. 26:-செயின்ட்லோவிலிருந்து அமெரிக்கர் தாக்குதல் ஆரம்பம்.

ஆகஸ்ட் 6:-டாமூ கைப்பற்றப்பட்டது. 12:- நார்மண்டியிலிருந்து ஜெர்மன் பின்னேற்றம் ஆரம்பம். 15:-தெற்கு பிரான்ஸில் பெரிய நேசப் படை இறங்கியது. 25:- பாரிஸ் விடுதலை பூர்த்தியாயிற்று. ருமேனியா ஜெர்மனி மீது போர் தொடுத்தது. 30:- ப்ளோயஸ்டி பிடிபட்டது. 31:- பிரிட்டிஷார் அமீன்ஸைக் கைப்பற்றினர். அமெரிக்கர்கள் ஸெடானை அடைந்தனர். புகாரெஸ்டில் ரஷ்யப் படைகள்.

செப்டம்பர் 1:- டீப்பேயும், ஆராஸும், வெர்டூனும் பிடிபட்டன. 3:-ப்ரூஸெல்ஸை பிரிட்டிஷார் விடுவித்தனர். ஆன்ட்வெர்ப் நோக்கி முன்னேற்றம். லயான்ஸ் வசப்பட்டதாக அறிவிப்பு. 5:- நேசப் படைகள் ஜெர்மனிக்குள்ளேயே போர் நடத்த ஆரம்பித்தன. ஆக்கனும் ஸார்ப்ருக்கனும் பிடிபட்டன. ரஷ்யா பல்கேரியா மீது போர் தொடுத்தது. 6:-ரஷ்யத் துருப்புகள் யுகோஸ்லாவிய எல்லையை அடைந்தது. 8:-பிரிட்டன் மீது பறக்கும் குண்டுத்தாக்குதல் அநேகமாய் முடிந்து விட்டதாக டங்கன்ஸாண்டி அறிவிப்பு. 9:-சோவியத் துருப்புகள் கிழக்கு பிரஷ்யாவிற்குள் பிரவேசித்தன. 10:-க்யூபெக்கில் சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆலோசனை ஆரம்பம். 15:-நான்ஸியை நேசப் படைகள் கைப்பற்றின. 16:-ப்ரெஸ்ட் பிடிபட்டதாக அறிவிப்பு, ஸோபியாவில் செஞ்சேனை பிரவேசம். 17:-ஹாலந்து மீது விமான மூலம் நேசப் படையெடுப்பு. 19:-ரஷ்ய-பின்னிஷ் யுத்த நிறுத்த உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. 22:-எஸ்தோனியத் தலைநகரான டாலின் பிடிபட்டதாக ஸ்டாலின் அறிவித்தார். 30:-டோவர் மீது பீரங்கித் தாக்குதல் ஓய்ந்தது.

அக்டோபர் 1:-கலே கனேடியத் துருப்புகள் வசமாயிற்று. 5:-கிரீஸில் நேசப் படைகள் இறங்கியதாக அறிவிப்பு. 9:-மாஸ்கோவில் சர்ச்சில். 13:-ரஷ்யர்கள் ரீகாவைக் கைப்பற்றினர். 14:-ஏதென்ஸ் பிரிட்டிஷ் துருப்புகள் வசமாயிற்று. 20:- அமெரிக்க முதலாவது சைன்யத் துருப்புகள் ஆக்கனைக் கைப்பற்றின. மக்ஆர்தர் பிலிப்பைன்ஸுக்குத் திரும்பினார். பெல்கிரேட் கைப்பற்றப்பட்டதாக அறிவிப்பு. 23:-'முப்பெரும் தலைவர்கள்' டிகாலின் நிர்வாகத்தை தாற்காலிக பிரெஞ்சு சர்க்காராக அங்கீகரித்தனர்.

நவம்பர் 1:-வால்சானில் பிரிட்டிஷ் கமாண்டோக்கள் இறங்கினர். 6:-ஸ்டாலினுக்கு வெற்றி விருது அளிக்கப்பட்டது. 14:- யுகோஸ்லாவிய தேசிய விடுதலைச் சைன்யம் மாஸிடோனியாவின் தலைநகரான ஸ்கோப்ளிஜேயை விடுவித்தது. 22:-மெட்சும் சாரேபோர்க்கும் அமெரிக்கர் வசமாயின. பிரெஞ்சு முதல் சைன்யத் துருப்புகள் மல்ஹவுசைக் கைப்பற்றின. 28:- பிரிட்டிஷ் யுத்த முயற்சி பற்றி வெள்ளையறிக்கை பிரசுரம். பெல்ஜியத்தில் ஐஸனோவர்-மாண்ட்கோமெரி ஆலோசனை.

டிசம்பர் 6:- சார்லட்டன் நேசப்படைகள் வசமாயிற்று. ரவன்னா பிடிபட்டது.

1945

பிப்ரவரி 12:-யால்டா மாநாடு பற்றி சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் அறிக்கை. நேசப் படைகள் க்ளீவைக் கைப்பற்றின. 13:-செஞ்சேனை புடாபெஸ்டைக் கைப்பற்றியது.

மார்ச் 6:-கொலோனை அமெரிக்கர் கைப்பற்றினர். 7:-அமெரிக்க முதல் சைன்யத் துருப்புகள் கொப்லென்ஸுக்குத் தெற்கே ரைனைக் கடந்தன. 17:-மூன்றாவது சைன்யத் துருப்புகள் காப்லென்ஸுக்குள் பிரவேசித்தன. 24:-மாண்ட்கோமெரி ரைனைக் கடந்து தாக்கினார்.

ஏப்ரல் 5:- சோவியத் ஜப்பானிய நடுநிலைமை ஒப்பந்தம் முறிந்து விட்டதாக மாஸ்கோ ரேடியோ அறிவித்தது. பசிபிக் அரங்கத்திலுள்ள சைன்யப் படைகளையெல்லாம் மக்ஆர்தரும் கடற்படைகளையெல்லாம் நிமிட்ஸும் தலைமை வகித்து நடத்துவார்கள் என்று வாஷிங்டன் அறிவித்தது. 7:-ஜப்பானின் கப்பல்களுக்குள்ளே பெரிதான 45 000டன் யாமாடா மூழ்கடிக்கப்பட்டது. 10:-எட்டாவது சைன்யம் ஸீனியோ நதியைக் கடந்தது. அமெரிக்க ஒன்பதாவது சைன்யம் ஹனோவரைக் கைப்பற்றியது. 11:- எஸ்ஸென் விழ்ந்ததாக அறிவிப்பு. 13:- வியன்னாவை செஞ்சேனை கைப்பற்றியதாக அறிவிப்பு. 14:- ரூர் வட்டாரத்தில் வான்பேபன் சிறைபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 15:-பர்லினுக்கு 50மைல் தூரத்தில் நேசப்படைகள். 19:- பேட்டனின் துருப்புகள் செகோஸ்லவாகியாவில் பிரவேசித்தன. பின்னர், பெர்லின் வீழ்ச்சியும், முசோலினி, ஹிட்லர் மறைவும், ஜெர்மன் படைகளின் சரணும் யாவரும் அறிந்ததே.

மணமகன் தேவை

15-வயதும், மாநிறமும், முதல் பாரம்வரை படித்தவரும் சாதி, சமய, மதப்பற்றற்றவருமான மணமகளுக்கு சமயம், மதம், கடவுள், பொருள் உழைப்பு, பொது உடமை ஆகிய விஷயங்களைக் குறித்து நன்கு தீர்க்கமுற சிந்தித்துத் தெளிந்த, மீசையுள்ள ஆண்மகன் தேவை. மணமகன் உடலுறுதியும் தகுந்த வயதும் உடையவராயிருத்தல் வேண்டும்.

விருப்பமுடையோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

K. V. K. R. P.
C/o K. V. K. ராமசாமி,
சால்காவேரி, போஸ்டு,
இராசிபுரம் தாலூகா,
சேலம் ஜில்லா.

திராவிடக் கழகங்கள்

வட ஆற்காடு ஜில்லா திராவிடர் கழக அழைப்புக் கூட்டம் 22-4-45-ந் தேதி திருப்பத்தூரில் தோழர் சி. ஆர். அருணாசல செட்டியார் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும், ஈரோட்டிலிருந்து புறப்படும் மாணவ சொற்பொழிவாளர்களை இம்மாவட்டத்திற்குவரவழைத்து பிரச்சாரம்செய்வதென்றும், இந்த ஜில்லாவிலுள்ள தடையுத்தரவை நீக்கும்படி ஜில்லா கலெக்டரைக் கேட்டுக் கொள்வதென்றும் மாநாட்டை இரண்டு மாதங்களுக்குப் பின் நடத்துவதென்றும் கமிட்டி மெம்பர்களுக்கு வருட சந்தா ரூ. 5 என்றும் தீர்மானிக்கப்பட்டது. சிலரிடம் சந்தாவும் வசூலிக்கப்பட்டது. பின்னர் நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தோழர்கள் திருப்பத்தூர் வி. எஸ். வீரபத்திர முதலியார் தலைவராகவும், வேலூர் திருநாவுக்கரசு, தண்டராம்பட்டு சித்தாரெட்டி, நாட்டறம்பள்ளி கந்தசாமிக் கவுண்டர் உபதலைவராகவும், திருப்பத்தூர் எம். நடேசம் பிள்ளை காரியதரிசியாகவும், ஆம்பூர் ஏ. பெருமாள் போளூர் சுப்பிரமணியம் துணைக் காரியதரிசிகளாகவும், திருப்பத்தூர் சி. ஆர். அருணாசலம் செட்டி பொக்கிஷதாரராகவும், 25 பேர்கள் கமிட்டி மெம்பர்களாகவும், வேலூர் ஏ. பி. ஜனார்த்தனம், வாணியம்பாடி ஜி. பழனிமுத்து, திருப்பத்தூர் வி. எம். ராசமாணிக்கம் அமைப்பாளர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மற்றும் கமிட்டி மெம்பர்கள் சேர்த்துக்கொள்ள கமிட்டியாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஷை நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் இந்த ஜில்லாவில் கூடினாலும் 11 மெம்பர்கள் இருந்தால் கோரமாகக் கருதப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

* *

நாகப்பட்டினம் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 4-4-45-ந் தேதி தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடிற்று. 1-1-45 முதல் 31-3-45 முடிய கழக வரவு செலவு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. கழக ஆண்டு விழா இம்மாதம் மூன்றாவது வாரத்தில் நடத்துவதென்றும் அதுசமயம் புதுத்தேர்தல் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

22-4-45-ஆம் தேதி குடந்தைத் தோழர் பி. ஆர் பொன்னுசாமி அவர்கள் தலைமையில் ஷை கழகத்தின் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் சச்சிதானந்தம், கொடியேற்றிவித்தார். ஏ. ஆறுமுகம் பெரியார் படத்தையும், எஸ். கே. சாமி பன்னீர்செல்வம் படத்தையும், மாணவர் இரா. இளவழுதி திராவிடநாட்டுப் படத்தையும், காளியப்பன் பாரதிதாசன் படத்தையும் திறந்துவைத்தார்கள். பின் ஷை கழகத்திற்கு தலைவராக ஆர். வி. கோபால், உபதலைவராக டி. பி. ஆறுமுகம், செயலாளராக மா. மலைக்கொழுந்து, உபசெயலாளராக பி. கே. பக்கிரிசாமி, பொருளாளராக டி. கே. விஜயராகவல் பி. ஏ., பி. எல்., அவர்களும் 10 பேர் நிர்வாகிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்-

அன்று மாலை 7 மணிக்கு வெளிப்பாளையம் அவுரித்திடலில் தோழர் டி. கே. விஜயராகவல் பி. ஏ., பி. எல்., தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். காளியப்பன், இளவழுதி, எஸ். கே. சாமி முதலியவர்கள் பேசினார்கள். சோஷியலிஸ்டுகள் கேட்ட கேள்விகளுக்குத் தோழர்கள் இளம்வழுதியும், எஸ். கே. சாமியும் தக்க பதிலளித்தார்கள்.

* *

சென்னை நுங்கம்பாக்கம் திராவிடர் கழக கட்டிடத்தில் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம் 29-4-45ல் தலைவர் ச. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் கூடிற்று. அதுசமயம் பன்னீர் செல்வத்தின் நினைவு நாளும் இன்னும் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு கழகச் செயலாளர் நவநீதக் கண்ணனால் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறிற்று.

* *

பெண்ணாகடத்தைச் சேர்ந்த பெ. பொன்னேரியில் 2-4-45ல் தோழர் இலக்குமிபதி அவர்கள் முயற்சியால் ஒரு திராவிடர் கழகம் திறக்கப்பட்டது. தோழர்கள் இராமசுவாமி, சண்முகம், பஞ்சநதன் முதலியவர்களும் கலந்துகொண்டனர். 50 அங்கத்தினர்கள் சேர்த்து திராவிடர் கழகத்திற்கு அனுப்பப்பட்டது. வரும் மாதம் சுற்றுச்செலவு செய்யும் மாணவர்களைக் கொண்டு கூட்டம் நடத்த ஏற்பாடுசெய்வது என முடிவு செய்யப்பட்டது.

* *

பூந்தோட்டம், ஓடாக்கநல்லூர் தென்பாதி தருசூர் ஆகிய கழகங்களின் சார்பாக 28-4-45-ல் மதுராங்கநல்லூரில் தோழர் ஆதிமூலம் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் கூடி 20-6-45 முதல் வாரத்திற்குள் ஓர் மகாநாடு நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதற்குப் பெரியார், தளபதி சி. என். அண்ணாதுரை, புரட்சிக்கவி பாரதிதாசன், டி. பி. வேதாச்சலம் மற்றும் பல தலைவர்களையும் மாநாட்டிற்கு அழைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

ஷையூர் கழக சார்பில் எஸ். தெட்சணாமூர்த்தி தலைமையில் 30-4-45-ந் தேதி ஓர் பொதுக் கூட்டம் கூடிற்று. அவ்வமயம் பெங்களூர் ஏர்கிரேப்ட் (Aircraft) அலுவலாளரான அ. தியாகராசன் அவர்கள் பண்டைத் தமிழர் நிலைமையையும் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தைப் பற்றியும் விரிவாகப் பேசினார். பின்னர் கழகத் தலைவர் பி. கோவிந்தசாமியால் நன்றிகூறப்பட்டது.

28-4-45-ந் தேதி திராவிடப் பெற்றோர் சங்கக் கூட்டம் திருச்சி முல்லைக்குடியில் தோழர் திருவளர்சோலை திராவிடர் கழகத் தலைவர் முத்துக்குமரன் தலைமையில் கூடியது. தோழர் ஏ. சாமிக்கண்ணு கல்வி என்பது பற்றியும், தோழர் எஸ். சோமசுந்தரம் திராவிடப் பெற்றோர் கடமை என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தருமா? அழகைப்படைத்த அந்த பிரமா உனக்கு அறிவையா படைக்கவில்லை? யார் அதை நம்புவார்கள். இருக்கும் அறிவினால் எண்ணிப் பார். பலரை உன்னிடம் அனுப்பினேன். வந்தவர்களை எல்லாம் வாய்க்கு வந்தபடி ஏசிப் பேசினாயாம். என்னிடம் வந்து அழுதார்கள். எனக்கு அழுகை வரவில்லை. இரக்கம் தான் பெருகிற்று. தக்கபடி நீங்கள் எடுத்துப் பேசவில்லை என்று அவர்களைச் சாடினேன். நானே புறப்பட்டு வந்தேன். யோசியாதே. மனதைத் திடப்படுத்திக் கொள். உனக்கு உயர்வழி, இதற்கு ஒப்பானவழிவேறில்லை. வலிய வந்த சீதேவியை உதைத்துத்தள்ளாதே. ஏதோ அம்மா உன்புத்தியைக்கொண்டு நடந்துகொள். எனக்கு இதனால் என்னவும் நன்மையில்லை, நான் போய் வரட்டுமா? நாளை வருகின்றேன். இதோ இந்தப் புடவையை எடுத்துக் கட்டிக் கொள். நாளை நான் பார்க்கும்பொழுது இப்பொழுது கட்டியிருக்கும் கந்தலை நான் காணக்கூடாது. என்ன வரட்டுமா? என்று தாடையிலே சிறுதட்டு ஒன்று தட்டி சதையைக்கிள்ளி செல்வாளாம் தாய் கிழவி.

தோழர்களே! இதற்கும் தமிழாசிரியர்கள் என்ற தலைப்பிற்கும் என்ன தொடர்பென ஐயமெழலாம். சமுதாயம் செய்த சதியினால் வறுமைக்குடும்பத்தில் பிறந்து வாடி வதங்கும் வனிதையர்கள் என்ற உவமை தற்காலத்தில் ஆட்சியாளர் செய்த அநீதியால் அஞ்சும் மனம் படைத்தவராயுள்ள பிற்போக்கான தமிழ் ஆசிரியர்கள். (சொக்கலிங்கனார் மொழிப்படி) சொகுசான வாழ்வை விரும்பிச் சோரம்போய்த் தன்னிலை இழந்த தாய்க் கிழவி என்று கூறிய உவமை பேசிபத்தின் போலே தன் தெளிந்த அறிவை அடகுவைத்துப் பறிகொடுத்த அன்பர் சொக்கலிங்கனாரை ஆவலும், உணவும், ஆனந்தமும் மிக்க மங்கையின் எதிர்கால (விபசார) வாழ்வு என்று கூறிய உவமை அத்தகைய தலைமைத்தனமாய், தமிழாசிரியர்களின் எதிர்கால (பித்தலாட்டமான) சுயராஜ்ய வாழ்விலையே யாகும். தாய்க்கிழவி, சொக்கலிங்கத்தின் தகிடுதத்தமான மொழியினால், மயங்கி வறுமையை ஒழிக்க வகையின்றி நலியும் தமிழாசிரியருள் ஒரு சிலர் கலை விற்கிடும் வனிதையர் இலர்போலச் சிக்கிடுவார்கள் என்பதை நானறிவேன். ஏனென்றால் இப்பொழுதே சில ஆசிரியர்கள் அந்த விபசார வாழ்விற்குப் பலியாகி (பெண்டிரின் பெண்மைத் தன்மை அழிந்தது போல புலவரின் புலமைத் தன்மை கெட்டு) கருகின்றார்கள். இந்த போல இன்னும் சிலர் தாய்க்கிழவியின் போதத்தின்படி தங்கள் வாழ்வு [illegible]டையலாம் எனக் கனவு கண்டு தன்னிலை யழிந்தாலும் அழியலாம், வறுமையிலும் செம்மையைக்காண்போம் எனக் கலிந்து முனைந்தெழும் மங்கையர்கள் சிலர், வந்து வந்து மனத்தைக் கெடுக்கும் வசீகரிக்கை படைத்த தாய் கிழவிக்குச் சாணத்தைக் கரைத்துத் தலை முழுக்குச் செய்வித்து விளக்குமாற்றைக் கொண்டு சாத்துப்படி நடத்துவார்கள் என்பதும் நாடறிந்த ஒன்றாகும். அதே போல தமிழாசிரியர்களுள்ளும், வறுமையில் செம்மை மனம் படைத்த இளம் புலவர்கள் உண்டு என்று அன்பர் சொக்கலிங்கனாருக்கு அறிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

(தொடரும்)

பொதுக் கூட்டம்

திருப்பத்தூர் (வ. ஆ.) திராவிடர் கழக சார்பில் 29-4-45-ல் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான பொது மக்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு வழக்கறிஞர் தோழர் பெரியசாமி பிள்ளையவர்கள் தலைமை வகித்தார். தோழர் வில்வராய் அவர்கள் போரைக் குறித்துப் பேசினார். பின் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் திராவிடர் கலை குறித்துப் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் நடேசன் அவர்களால் கைத்தறிக்காரர் துயரத்தைக் குறித்த தீர்மானம் கொண்டுவரப்பட்டு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

மதிப்புரை:

கிழவன் கனவு

தீட்டியவர்: மு. கருணாநிதி, திருவாரூர்.

கிடைக்குமிடம்:
ஏரா. விசெயராகவன்;
ராயல் சோடா பாக்டரி,
தெற்கு வீதி, திருவாரூர்.

'கிழவன் கனவு' என்ற புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். கிழவன் கண்ட கனவு எவ்வாறு நிறைவேறிற்று என்பதை ஆசிரியர் இச்சிறு நூலில் அழகாகத் தீட்டியிருக்கிறார். பணம் படைத்தவர் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதையும் இதில் காணலாம். உண்மையான காதல் எது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். விடுதலைக் கொடி தோன்றுவதாக விபுலானந்தரும், மல்லிகாவும் காணும் கனவை நினைவாக்க வேண்டியதின் முக்கியத்தை வலியுறுத்தியிருக்கிறார் இச்சிறு நூலில் ஆசிரியர். இத்தகைய நூற்களை ஆதரிக்கவேண்டியது திராவிட மக்களின் கடமையாகும்.

திருமணம்

திருச்சி தமிழ்நாடு விதவா விவாக சங்க ஆதரவில் தோழர் ஜே. எஸ். இராமானுசம் பி. ஏ., பி. எல்., தலைமையில் அரியலூர் தோழர் கி. சிவசிதம்பரம் ரிவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், மதுரை தோழர் ராமலிங்க முதலியார் குமாரத்தி தோழர் தனபாக்கியத்தம்மாளுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. இதன் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப் பட்டது.

வருந்துகிறோம்

புதுவையில், நமதியக்க வாதியும் பிரதிநிதியுமாய் உழைக்கும் தோழர் இலக்குமணன் புதல்வி பேபி ரூபா உயிர் துறந்தாள் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம் என்றும், சிறுமிக்கு வயது மூன்று என்றும் புதுவை தாகூர் கம்பெனியார் தெரிவிக்கின்றனர்.

* *

சென்னை ஜில்லா திராவிடர் கழக உறுப்பினர் தோழர் டி. மகாதேவனின் இளைய சகோதரர் டி. ராமன் 2 மாதம் நோய் வாய்ப்பட்டிருந்து சென்ற 24-4-45-ந் தேதி இயற்கையெய்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கப் படுகிறது.

பவானித் தோழர் எம். எஸ். பழனிசாமிக்குக் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் ஏற்பட்ட பெரிய அம்மை காரணமாக உடல் நலிவுற்றிருக்கிறார். இன்னும் இரண்டு மாதத்திற்கு அவர் வெளியில் வர மாட்டார் எனத் தெரிகிறது.

தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி

மானேஜர்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42 Cutchery street, Erode.